**R 5405**

# ஓய்வு நாளின்போது சட்டத்துக்கு இசைவாயிருத்தல்

# LAWFUL ON THE SABBATH

**“மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது” – மாற்கு 2:27.**

கிறிஸ்தவ ஜனங்களிடையே ஓய்வுநாளைக் குறித்து அதிக குழப்பம் மேலோங்கியிருக்கிறது. நியாயப்பிரமாணத்தின்கீழ் சுபாவ இஸ்ரயேலருக்கான தேவ ஏற்பாடுகளும், இயேசுவின் பின்னடியார்களுக்கான தேவ ஏற்பாடுகளும் முற்றிலும் மாறுபட்டவை என்று வெகுசிலரே உணர்ந்திருக்கின்றனர் என்பதே இந்த குழப்பங்களின் மத்தியில், பயன்தருகிற ஒரே ஆதாரமாயுள்ளது. இந்த உடன்படிக்கையின் கீழான அனைத்தும் முன்னடையாளமாயிருந்து, கிறிஸ்தவர்களுக்கு விலையேறப்பெற்ற பாடத்தைக் கொடுக்கின்றது. ஆனால் முன்னடையாளத்துக்கான நிஜத்தைப் பொருத்திப் பார்ப்பதில் தவறுவது, நம்சிந்தையில் குழப்பம் ஏற்படுவதோடு, நிஜத்தின் அழகையும், அதன் வலிமையையும் இழக்க நேரிடுகிறது.

யூதருக்கு பிரமாணத்தைக் கொடுப்பதற்கு முன்பு, ஓய்வு நாள் இருந்ததில்லை. விதிவிலக்காக, ஓய்வு என்பது இளைப்பாறுதலைக் குறிக்கிற வார்த்தையாக மட்டுமே இருந்தது. மேலும் சிருஷ்டிப்பின் வாரத்தில் ஏழாம் மாபெரும் நாளில் அல்லது காலப்பகுதியில், தேவன் ஓய்வெடுத்தார் என்று நமக்கு அறிவிக்கப்பட்டது. தேவனோடு நடந்த ஏனோக்கு, தேவனுடைய சிநேகிதனாகிய ஆபிரகாம் மற்றும் மற்றவர்கள் கர்த்தருக்கு பிரியமாய் நடந்தார்கள். இவர்கள் ஓய்வுநாளைக் குறித்து ஒன்றும்அறியாதவர்கள். ஒப்புரவாக்கும் நாளையும் அதன் பலிகளையும் குறித்தும் அல்லது, இஸ்ரயேலின் நியாயப்பிரமாணம் சம்பந்தமான மற்ற விஷயங்களையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

மோசேயின் கீழ், ஊழியவீட்டாராக இஸ்ரயேலர்கள் இருந்ததாக அப்போஸ்தலர் பவுல் விவரிக்கிறார், ஆனால் சபையோ, கிறிஸ்துவின் கீழாக, வீட்டின் புத்திரர்களாக இருக்கின்றனர்(எபி3:1). வீட்டின் புத்திரரோடு செயல்தொடர்புகொள்ளும் தேவனுடைய முறையானது, மிகபொருத்தமாய் இருந்து, வீட்டின் ஊழியக்காரரோடு செயல்தொடர்புகொள்ளும் முறைமைகளோடு வேறுபட்டதாய் இருக்கிறது. ஏன் அல்லது எதற்காக என்று விளக்கமளிக்காமல், ஊழியர்களுக்கு கட்டளைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் தேவன் நம்மிடத்தில் புத்திரர்களோடு தொடர்பு கொள்வதுபோல தொடர்பு–வைக்கிறார் என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். பரலோகத்தந்தை உண்மை கிறிஸ்தவனுக்கு தம் திட்டங்களையும் தம் நோக்கங்களையும் தம் ஏற்பாடுகளையும் அறியப்பண்ணுகிறார். எதற்காகவெனில், அவரது புத்திரர்கள் அவரது ஆவியைப்பெற்று, கட்டளை கொடுத்திருப்பதால் அல்ல மாறாக, பிதாவின் சித்தம் செய்வதில் மகிழ்ச்சியுற்று, சுயத்தைப் பலிசெலுத்துதல் மூலம் கீழ்ப்படிந்து, இத்திட்டங்களுக்குள் ஒத்துணர்வோடு நுழைவதற்காகவே.

இயேசுவும் அப்போஸ்தலர்களும் யூதர்கள், மேலும், இயேசு அவரது மரணத்தின் மூலமாக, “விசுவாசிக்கிற எவனுக்கும் நீதியுண்டாகும்படி, நியாயப்பிரமாணத்தின் முடிவாகஆகும் நேரம்வரை, அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கடமைப்பொறுப்பின் கீழிருந்தனர். அந்நேரத்திலிருந்து, இயேசுவின் பின்னடியார்கள் யூதரது பிரமாணத்துக்கு கட்டுப்பட்டவர்களல்ல. அவர்கள் பத்துக் கட்டளைகளின் பேரில் பிரியமாயிருந்தனர், ஏனெனில் அந்தக் கட்டளைகள் தேவசித்தத்தை வெளிப்புறவழியில் சுட்டிக் காட்டுகின்றன. தேவபுத்திரர் அனைவரும் தேவசித்தத்தை அறிய ஆர்வமாயிருந்து, தாமாக முன்வந்து அதை செய்கின்றனர். ஆனால் கொலை செய்யாதே, களவு செய்யாதே என்று தேவன் புத்திரவீட்டாருக்கு முகவரியிட்டு கூறவில்லை, ஏனெனில் அவர்கள் நிச்சயமாக பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் கொலைசெய்யவோ களவாடவோ விரும்பமாட்டார்கள்.

தேவவீட்டின் புத்திரர்களோடு வீட்டின் தலையாகிய கிறிஸ்துமூலம் செயல்தொடர்புகொள்வதற்கு ஒரு புதிய பிரமாணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரமாணம் முன்பு அடையாளமாகப் புரிந்துகொள்ளப்பட்ட மோசேயின் பிரமாணத்தைக் காட்டிலும் அதிக அர்த்தமுடையதாயும், எல்லாவிதத்திலும் புரிந்துகொள்ளும் விதமாகவும் உள்ளது. அது அன்பின் பிரமாணமேயாகும். “அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது” என்று அப்போஸ்தலர் அறிவித்திருக்கிறார். அன்பு என்ற ஒரே சொல்லில் அந்தப் பிரமாணத்தைப் புரிந்துகொள்ளமுடியும். அந்த அன்பு தேவனை எல்லாவற்றைக் காட்டிலும் நேசிப்பதும், நம் உடன் சகோதரரை நேசிப்பதுமாகும். இறுதியாக இயேசு பிரகடனப்படுத்தியவாறு; “ஒரு புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்; நான் உங்களை நேசித்ததுபோல், நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு கூறுங்கள்”. ஒருவர் மற்றவர்க்காக நம் ஜீவனை கையளித்திருக்கிற நம்மிடத்தில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

**ஏழாம் நாள் – முதலாம் நாள்**

சுவிசேஷயுகத்தின் ஆரம்ப நாட்களில் இயேசுவின் பின்னடியார்கள் வாரத்தின் முதலாம் நாள் சந்திக்கத்

தொடங்கினர். இயேசு அந்நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, அதே நாளில் பலதடவை தம் சீஷருக்கு காட்சியளித்தார் என்ற உண்மையில், அந்த வழக்கத்தின் தொடக்கம் இருந்தது வெளிப்படையான நிஜமான ஒன்று. மேலும் அடுத்தவாரம் முதலாம் நாளிலும் அவர் மீண்டும் காட்சியளித்தார். ஆகவே வாரத்தின் முதலாம் நாளில் சீஷர்களுக்கிடையேயான ஐக்கியம் வழக்கமாயிற்று. இந்நாளில் கூடுவது கர்த்தரால் கட்டளையிடப்படவில்லை, மாறாக, தங்கள் குருவை நினைவுகூறும் அவர்களது விருப்பத்தின்படியும், ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்ளவும் இவ்வாறு துவங்கப்பட்டது. ஒருவேளை அவர்கள் ஓய்வுநாளையும், அதேபோல் முதல் நாளையும் குறிப்பிட்டகாலம் அனுசரிக்க தீர்மானித்திருக்கலாம். மோசேயையும் அவரது பிரமாணத்தின் ஆதிக்கத்திலிருந்தும் முற்றிலுமாக கடந்துசென்று, இயேசுவின் தலைமையின்கீழும், அவரது வழிகாட்டுதலின் கீழும் இருப்பதைப் புரிந்துகொள்வதில் சந்தேகத்திற்கிடமின்றி சிரமம் அடைந்தனர். கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமை உண்மையானது.

கிறிஸ்தவர்கள் தற்பொழுது வாரத்தின் முதலாம் நாளுக்கு சாதகமாக, 7ம் நாளைக் கடைப்பிடிப்பதை விட்டுவிட்டபோதிலும், தேவன் இந்த மாற்றத்துக்கு அதிகாரம் கொடுத்தார் என்று அநேகர் தவறுதலாக சிந்திக்கின்றனர். ஆனால் அப்படியல்ல; கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவனல்ல, கிருபைக்கு உட்பட்டவன். ஆதிகால கிறிஸ்தவர்கள் முதலாம் நாளில் ஒன்றிணைந்து சந்தித்துக்கொண்டது சிலாக்கியமாக அமைந்தது, ஆனால் அது தேவனுடைய அறிவுறுத்தலின்படி நடைபெற்றதல்ல. இப்போதும் அப்படியாகவே இருக்கிறது, இனியும்கூட சிலருக்கு அவ்வாறே இருக்கும். பரலோகத்தகப்பனின் வார்த்தையை கற்பதற்கும், தங்கள் இருதயங்களில் அவருக்கு ஆராதனை செலுத்தவும், அவரைத் தொழுதுகொள்ளவும், உண்மைக் கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து ஐக்கியங் கொள்வதற்கு அதிக வாய்ப்புக்கள் பெற்றிருப்பதில்லை.

மனித சட்டங்களாலும், தவறான கருத்துக்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும், வாரத்தின் ஒரு நாள் விசேஷித்தவிதமாக ஒதுக்கி வைக்கப்பட்டதற்காக, உண்மைக் கிறிஸ்தவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி மகிழ்ச்சியடைவார்கள். அந்தநாளில் குறிப்பாக, அவர்களால் அதிகமாக ஜெபத்துக்கும், தொழுதுகொள்ளவும், துதிப்பதற்கும், வேதாகம கல்விக்கும், நற்கிரியைகளுக்கும் தங்களை கொடுக்க முடியும். வாரத்துக்கு இரண்டு ஞாயிற்றுக் கிழமைகள் அல்லது அதற்கு மேலாக அனுமதிக்கும்படி, தங்கள் பூமிக்குரிய நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுமானால், கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் மகிழ்ச்சியடைவர். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் முறையான குதூகலம் அடைய வேண்டுமானால், உடன்படிக்கை செய்த கர்த்தருடைய ஜனங்கள், தற்போது செல்வாக்குப் பெற்றிருக்கும் தவறான கருத்துக்களிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்.

**இளைப்பாறுதலாகிய ஓய்வு நாள்**

இஸ்ரயேலரது பிரமாணம் இரண்டு ஓய்வு நாட்களை உடையது. முதலாவது, ஒவ்வொரு ஏழாம் வருடமாக இருந்து, அதன் பன்மடங்காகிய 50ம் வருடத்தில் நிறைவடைகிறது. இந்த 50ம்வருடம் யூபிலி வருடமாகவும், முழுமையாக விடுவிக்கப்படுதலையும் உள்ளடக்கியது. மற்றொன்று, ஒவ்வொரு 7ம் நாள், அதன் பெருக்குத் தொகை மூலம் நிறைவேறும் 50ம் நாள் – அதாவது, பெந்தெகொஸ்தே நாள். முன்னடையாளமாகக் கூறப்பட்ட இந்நாளில், தேவ ஜனங்கள் தற்போதுகூட இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார்கள்.

இந்த இரண்டையும் குறித்து அப்போஸ்தலர் எபிரேயர் 4:1–11இல் குறிப்பிடுகிறார். நிஜமான இஸ்ரயேலர்கள் அனுபவிக்கின்ற இருதய சமாதானத்திலும், இளைப்பாறுதலிலும் அந்த ஓய்வுநாளின் நிறைவேறுதல் இருந்தது. அவர்களுக்கு இது ஒரு நிலையான ஓய்வாக இருக்கிறது. அவர்கள் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார்கள். அங்கே தேவ சமாதானம் தங்கள் இருதயங்களை ஆளுகை செய்யும் இடத்தை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். தங்களது எல்லா நம்பிக்கைகளையும் தேவன்பேரில் வைத்து, எவ்வகையான கிரியை செய்வதாயிருந்தாலும் அவருக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் சொந்தக் கிரியைகளிலிருந்து இளைப்பாறுகிறார்கள். ஓய்வுநாளை ஆசரிப்பது அல்லது மற்ற எதுவாயிருந்தாலும்,எல்லோருக்கும் தேவையான உதவியை, இயேசுவைக்கொண்டு செய்த தேவனுடைய ஏற்பாட்டை அவர்கள் கண்டு, அவர்கள் , “அவருக்குள் முழுமையடையும்படிக்கு” இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார்கள். இந்த இளைப்பாறுதல் அல்லது சமாதானம், எந்த மனிதனாலும் அவர்களிடமிருந்து எடுக்கப்படமுடியாதது. தேவனில், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தில் அவர்கள் நிலைத்து நிற்கும்வரை இந்த சமாதானம் அல்லது இளைப்பாறுதல் அவர்களுக்குரியவை.

ஆனால் அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிக்கிறபடி, “தேவனுடைய பிள்ளைகளுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது”. வருங்காலத்துக்குரிய இளைப்பாறுதலாயுள்ளது. சபையானது தங்கள் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அனுபவிக்கும்போது, அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும். அப்பொழுது அவர்கள் தங்கள் இரட்சகர்போல் மாற்றப்பட்டு, தங்கள் கர்த்தருடைய மகிழ்ச்சிகளுக்குள் பிரவேசிப்பார்கள். அது முழுமையான இளைப்பாறுதலாக இருக்கும். பொதுவாக

உலகத்தின் ஜனங்களைப் பொறுத்தவரை, மாபெரும் மேசியாவின் ஆயிரவருட ஆளுகை அவர்களுக்கு ஓய்வுநாளாக(sabbath) இருக்கப்போகிறது. வசனங்களின் உட்கருத்துப்படி, அதில் அவர்கள் பரிபூரணத்தை அடையும் சிலாக்கியத்தைப் பெற்று, தேவனோடு இசைவாகும் நிலையை அடைந்து, இவ்வாறு இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள்.

இயேசு தம் அற்புதங்களில் அநேகமானவற்றை ஓய்வுநாட்களில் செய்திருந்தார். மாபெரும் ஓய்வுநாளாகிய ஆயிரவருட நாளின் உண்மையை வலியுறுத்தும் விதமாகவே இவ்வாறு செய்தார் என்பதில் ஐயமேதுமில்லை. இந்த ஆயிரவருட நாள் என்பது பூமியின் வரலாற்றில் 7ம் ஆயிரமாண்டு நாளாகும்.இதுவே அவரது இராஜ்யத்தின் காலமாக இருக்கப்போகிறது. ஆதாமுக்குள் இழந்த அனைத்தையும் கல்வாரியில் மீட்டிருந்து, மனுக்குலம் முழுவதும் பாவம், நோய், துக்கம், வலி இவைகளில் அகப்பட்டதிலிருந்து குணப்படுத்தப்படும் சிலாக்கியம் பெற்று, மனித சுபாவத்தின் பூரணத்துக்கு கொண்டுவரப்படுவார்கள்.

**ஓய்வுநாளின்போது நன்மை செய்தல்**

இயேசு மாம்சத்தின்படி யூதராயிருந்தபடியால், யூதருடைய நியாயப்பிரமாணத்தின் எல்லாக் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டிருந்தார். அதன் காரணமாக, அந்தப் பிரமாணத்துக்கு முரண்பாடாக அவரால் எதுவும் செய்யக்கூடாது. அதை அவரால் ஒதுக்கக்–கூடாமலிருந்ததுடன், யூதருக்கு ஓய்வுநாளின் உண்மை அர்த்தத்தை விளக்கவும் முடியாதிருந்தது. இவை அனைத்தும் பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு, ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டபின், பரிசுத்த ஆவியின் அறிவுறுத்தலின்கீழ், பின்னாளில் நிகழவிருந்தது.

‘‘ஜென்ம சுபாவ மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவை–களானதால் அவைகளை அறியவுமாட்டான்(1கொரி2:14).

ஆனால் பரிசேயர் வேதபாரகர் மற்றும் ரபிமார்களது போதனைகள் மூலமாக அச்சங்கொண்டிருந்து, நியாயப் பிரமாணத்தைத் தவறாகப் புரிந்திருந்தவைகளில் சிலவற்றை அவரால் சரிப்படுத்த முடிந்தது.

இவர்கள் சில காரியங்களில் நியாயப்–பிரமாணத்தின் எழுத்துக்களை பகட்டுக்காக மிகைப்படுத்திக் காண்பித்து, அதன் ஆவியை முற்றிலுமாக புறக்கணித்தனர். இயேசுவின் சீஷர்கள் கோதுமை வயல்வெளியின் வழியாக கடந்துபோனபோது, சில கோதுமை மணிகளை கையில் எடுத்து, உண்பதற்கு முன்பாக, அதன் உமியை நீக்கினர். அவர்கள் ஓய்வு நாளை மீறுகிறார்கள் என்று பரிசேயர் குற்றஞ்சாட்டினர். இயேசுவோ நியாயப்பிரமாணத்தின் மூலக்கருத்து இதுவல்ல என்று அவர்களிடம் எடுத்துரைத்தார். எந்த நன்மையையும் அல்லது அத்தியாவசியமான பணியையும் தடை பண்ணுவதற்காக இது ஏற்படுத்தப்படாமல், ஜனங்களுடைய நலனுக்காகவே ஏற்படுத்தப்பட்டது. வேதபாரகருடைய கூற்றுப்படி, கடிக்கும் தெள்ளுப்பூச்சையை ஓய்வுநாளில் தேடுவது பாவமாயிருக்கும், ஏனெனில் இது வேட்டையாடுவதற்குச் சமானம் என்கின்றனர். இவ்வாறு தேவனுடைய நேரிய நியாயமான பிரமாணத்தை பல்வேறு வழிகளில் முரண்பாடானதாக வெளிப்படுத்தினர். குறிப்பாக அற்ப விஷயங்களில் கண்ணோக்கமாயிந்து, நியாயப்பிரமாணத்தின் முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களில் – அவைகளில் அடங்கியுள்ள நியாயம், அன்பு, இரக்கத்தை அவர்கள் புறக்கணித்தனர்.

இப்பாடத்தில் ஓய்வுநாளில் குணப்படுத்தின இரண்டு சம்பவங்களை நாம் பார்க்க இருக்கிறோம். பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ, எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இயேசு அவளது அடிமைத் தனத்திலிருந்து ஓய்வுநாளில் விடுதலையாக்கினார். அவர் தம் கைகளை அவள்மேல் வைத்து, ‘‘உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்’’ என்றார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினாள். ஆனால் ஜெப ஆலயத் தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி; வேலைசெய்கிறதற்கு ஆறு நாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான்’’(லூக் 13:11–14).

இயேசுவை விசேஷமாகக் கடிந்துகொள்ளும் நோக்கத்திலேயே இவ்வாறு செய்யப்பட்டது. அதாவது, அவர் பரிசுத்தரல்ல, மேலும் ஓய்வுநாளை கவனமாக அவர் ஆசரிப்பதற்கு பதிலாக நியாயப்பிரமாணத்தை மீறுகிறார் என்று அறிவுறுத்தும் நோக்கிலேயே இவ்வாறு பேசப்பட்டது. ஆனால் இயேசுவோ மறுமொழியாக, ‘‘மாயக்காரனே உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது, தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா ? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா ? என்றார்’’(லூக்13:15,16). அவரை விரோதித்திருந்த அனைவரும், அவர் அப்படிச் சொன்னபோது வெட்கப்பட்டார்கள்.

மற்றொரு சம்பவம், நீர்க்கோவை வியாதியால் துன்பப்பட்டிருந்த ஒரு மனிதனை இயேசு கண்டார், நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து, அவர்களது மனப்பான்மையை அறிந்தவராய், ‘‘ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்’’. அதற்கு

அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர், நோய்வாய்ப்பட்டிருந்த அவனை அழைத்து சொஸ்தமாக்கி அனுப்பிவிட்டபிறகு, குற்றம் கண்டுபிடிப்போரை நோக்கி, "உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால் அவன் அதை உடனே தூக்கிவிடானோ ? என்றார். அதற்கு உத்தரவு சொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று(லூக்14:1–6).

ஓய்வுநாளைக் குறித்து, ஒரு பொருத்தமான புரிந்துகொள்ளுதலையும், தம் ஜனத்துக்கென இளைப்பாறுதலையும் தேவன் ஏற்பாடுசெய்திருக்கிறார். இது ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதம். "விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" இது நிரந்தரமான இளைப்பாறுதல், என்றென்றைக்குமுள்ள ஓய்வுநாள். விசுவாசிக்கிற நாம் எல்லோரும் விசேஷ வாய்ப்புக்களைப் பெற்றிருப்பதில் மகிழ்ச்சியடைந்து, கர்த்தருடைய நாமத்தில் ஒன்றிணைந்து, தங்களை ஒப்புக்கொடுத்து, அவரை தொழுதுகொள்ளவும் துதிகளை ஏறெடுக்கவும், வேதவாக்கியங்களைக் கற்கவும், சகோதர ஐக்கியத்திலும் ஈடுபடவேண்டும். எந்த நாள் என்று பொருட்படுத்தாமல், அப்போஸ்தலர் நமக்கு அறிவுறுத்துவதுபோல; சபைகூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல் நாம் விட்டுவிடாதபடி, நாளானது சமீபித்துவருவதை எவ்வளவாய்க் காண்கிறோமோ, அவ்வளவு அதிகமாக புத்தி சொல்லக்கடவோம். மகிமை நிறைந்த மேசியாவின் இராஜ்யத்தின் நாள் நெருங்கி வருகிறது, இரவு மற்றும் காரிருளின் நிழல்கள், அறியாமை, மூடப்பழக்கவழக்கங்கள் அகன்று போகிறது – எபிரேயர்10:25.

\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-